Regd. No. M. 4593. KUDI ARASU 8 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.
சனி வெளியீடு.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0
வெளிநாடு ரூ. 7-0-0 }

மாலை 19 } ஈரோடு 12-1-1946 மார்கழி௴ 29௳ { மலர் 14

## அரசியலில் வேண்டாம் அன்னிய மொழி

### இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரியார் ஈ. வெ. ரா. சொற்பொழிவு

✶

6-1-46 காலை 6-மணிக்கு ஈ.வெ.ரா., தோழர் மணியம்மை தனுஷ்கோடி மெயிலில் காரைக்குடி வந்து சேர்ந்தார்கள். வழியில் புதுக்கோட்டை, கோட்டையூர் முதலிய இடங்களில் மாணவர்களும், கறுப்புச்சட்டைத் தொண்டர்களும் ஸ்டேஷன்களில் ஏராளமாகவந்து பெரியார் வாழ்க, திராவிடநாடு திராவிடருக்கே, அடைந்தே தீருவோம் திராவிடநாட்டை என்கின்ற இலட்சிய ஒலிகளோடு ரயில்மேடை அதிரும்படி மக்கள் கவனத்தை இழுத்து பெரியாரை வண்டியை விட்டு இறக்கி கறுப்புநூல் மாலை கருப்புதுணி மாலை; மலர் மாலை ஆகியவைகள் அணிந்து ஆர்வம் காட்டினார்கள். பெரியார் காரைக்குடியில் இறங்கினதும், நூற்றுக்கணக்கான தொண்டர்கள் கொடிகளுடன், மாலைகளுடன், வாழ்த்தொலியோடு வரவேற்று பெரியாருக்கென்றே அமர்த்திய பஸ்ஸில் தொண்டர்களுடன் பெரியாரை ஊர்வலமாக வாழ்த்தொலியோடு,வெற்றியொலியோடு கடைவீதி முதலிய பல தெருக்களும் சுற்றி 11-மணிக்கு தோழர் சுப்பையா விசாலாட்சி அவர்களின் "சமதர்ம விலாஸ்" இல்லத்திற்கு அழைத்து சென்றார். காரைக்குடியை சேர்ந்த சுற்றுப்புறங்களிலிருந்து சுமார் 200 தோழர்கள் வரை வந்திருந்ததோடு, மற்றும் உள்ளூர் பிரமுகர்கள் சிலரும் வந்து தங்கள் அன்பை தெரிவித்து மாலைவரை பெரியாருடன் பல விஷயங்களைப்பற்றிப் பேசி இருந்தார்கள்.

மாலை 6-மணிக்கு பல தாய்மார்களும் பல தோழர்களும் குறிப்பாக விசாலாட்சி அம்மை, சங்காயி அம்மை, மஞ்சுளாபாய் அம்மை முதலியவர்களோடு பெரியார் அவர்கள் பொதுக்கூட்ட மைதானமாகிய மகர் நோம்பு பொட்டலுக்கு சென்றதும் அங்கு சுமார் பதினாயிர மக்கள் கூடியிருந்த பெரும் கூட்டத்தில் ஆரவாரத்தின் மத்தியில் பெரியார் மேடைமீது அமர்த்தப்பட்டார். சிவகங்கை வக்கீல் தோழர் க. ராஜசேகரன் அவர்களை தலைமை வகிக்கும்படி தோழர் ராம. சுப்பையா பிரரேபிக்க தேவகோட்டை தோழர் வைரவன் ஆமோதிக்க, தோழர் ராஜசேகரன் தலைமை வகித்து பெரியாரைப் பற்றி சில வார்த்தைகள் கூறி திராவிடர் நிலை, திராவிடநாடு என்பதைப்பற்றி பேசும்படி வேண்டிக்கொண்டார்.

பெரியார் இரண்டு மணிக்கு மேலாக திராவிடர்-ஆரியர் திராவிடர் வர்த்தம், ஆரியவர்த்தம், பிரம்மவர்த்தம் என்பவைகளைப்பற்றி சரித்திர,சாஸ்திர, அனுபவ ஆதாரங்களோடு எடுத்துச் சொன்னதோடு மதப்பித்தலாட்டத்தாலும்அரசியல் பித்தலாட்டத்தாலும் இந்திய ஆரியருக்கும், ஐரோப்பிய ஆரியருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தால் திராவிட சமுதாயமும், திராவிடநாடும் அடைந்த இழிவையும் ஈன நிலையையும்பற்றி மக்கள் அதிசயித்து, வியப்புற்று திடுக்கிட்டு, புத்துணர்ச்சி பெறும்படியாகவும், கண்விழிப்பு ஏற்படும்படியாகவும் விரிவாய் பேசினார். காரைக்குடியில் உள்ள சில காங்கிரஸ்காரர்கள் மக்களின் மாற்றத்தை, மாறுதல் உணர்ச்சியை பார்த்தவுடன் நடுக்கம் கொண்டு காலித்தனத்தில் பிரவேசிக்கத் துணிந்து "கடவுள் உண்டா-இல்லையா?" என்ற சீட்டை பெரியாரிடம் தொடுத்தனர். அதற்குப் பதில் சொல்வதின் மூலம் ஆரிய புரட்டையும், ஆரிய கடவுள் தன்மையையும் விளக்கிக்கொண்டு வரும்போது மக்கள் அதிகமாக சிரித்து கைத்தட்டும் ஆரவாரங்களைப் பார்த்து மீண்டும் சில காலிகள் "வந்தே மாதரம், காந்திக்கு ஜே, ஜெய் ஹிந்த்" என்று கூச்சல் போட ஆரம்பித்தார்கள். இந்தச் சமயம் அவர்களை அடக்க சில தோழர்கள் முயற்சித்ததில் சற்று அமைதியின்மை ஏற்பட்டது. இரண்டு நிமிடத்தில் மீண்டும் அமைதி ஏற்பட்டு மக்கள் கவனிக்க ஆரம்பித்தனர். பெரியார் வந்தேமாதரத்தின் புரட்டைப்பற்றிப் பேச ஆரம்பித்தார். அதாவது, "வந்தேமாதரம், காந்திக்கு ஜே, முதலியப் விவகாரத்திற்கு இடமான பேச்சுக்களை பற்றியும், கடவுள் சம்பந்தமான பேச்சுக்களைப்பற்றியும், இங்கு பேசக்கூடாது என்றே எண்ணி வந்தேன். ஆனால் காங்கிரஸ் தோழர்கள் அதைப் பேசும்படி என்னை இழுத்துவிட்டார்கள். ஆரிய கடவுள் சங்கதியும், ஆரிய மத சங்கதியும் ஆபாசமாய் மக்கள் சிரிக்கும்படியான நிலை இங்கு ஏற்பட்டவுடன் அரசியல் கூச்சலிட ஆரம்பித்து விட்டார்கள். அரசியல் கூச்சலில் மிகவும் மானங்கெட்ட கூச்சல் இந்த 'வந்தே மாதிரம், காந்திக்கு ஜே' என்பதாகும். வந்தேமாதிரம் ஒரு தள்ளுப்பட்ட பேச்சு. வந்தேமாதிரம் செத்து 7-வருடத்திற்கு மேலாகி விட்டது. மானமில்லாமல் காங்கிரஸ்காரர்கள் மறுபடியும் அதை கூட்டங்களில் காலித்தனம்செய்ய பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள்.

இந்தி எதிர்ப்பின்போதே வந்தேமாதிரம் என்பது அந்நியமொழி என்றும் அதை இங்கு சொல்வது சுத்த இரத்த ஓட்டமுள்ள தமிழ் மகனுக்கும், தமிழ் மொழியில் பற்றுள்ள எந்த தமிழனுக்கும் மானமுள்ள காரியம் ஆகாது என்று சொல்லி தடுத்து கிளர்ச்சிசெய்தும், அதுபோலவே முஸ்லிம்களும் வந்தேமாதிரம், வந்தேமாதிரப்பாட்டு ஆகியவைகள் இந்திய அரசியலில் உச்சரிக்கக்கூடாது என்று ஆட்சேபித்து தடுத்தும், அந்த மறுப்புக்கும், ஆட்சேபனைக்கும் பயந்த காங்கிரஸ்காரர்கள் இனிமேல் அதை

பயன்படுத்துவதில்லை என்று சொல்லி அவர்கள் ஆட்சி அதிகார ஸ்தானத்திலேயே இருந்துகொண்டும், இன்று மற்றொரு கட்சியார் கூட்டிய கூட்டத்தில் வந்து காலித்தனம்செய்ய பயன்படுத்திக்கொள்வதானது அவர்களது இழிதன்மைக்கு ஒரு எடுத்துக்காட்டு ஆகும் என்றும், 'வந்தே மாதிரம்' என்பதை எடுத்துக்கொண்டால், வந்து எமாத்துகிறோம்,என்ற வார்த்தையாகும் என்றும் அது வேறு மொழி என்று எடுத்துக்கொண்டால் தமிழன் தன் தாய்மொழி பற்றற்ற, மானமற்ற, ஈனப்பிறவி என்பதை குறிக்க ஒரு உதாரணமாகும்," என்றும் ஆவேசமாய்ச் சொன்னவுடன் மறுபடியும் சிலர் கூப்பாடுபோட ஆரம்பித்தார்கள். பெரியார் அக்கூப்பாட்டை லட்சியம் பண்ணாமல் உரத்த குரலில் "வந்தேமாதிரம் என்ற சொல் அன்னியச் சொல் என்று தெரிந்தும், அதற்கு தமிழில் சொற்களிருந்தும் தமிழன் எதற்காக அதை சொல்கிறான் என்பதற்கு எனக்கு யாராவது பதில் சொன்னால் அச்சொல்லை அனுமதிக்க ஆட்சேபனையில்லை, இல்லாவிட்டால் அது இழிவான காரியம், அதைச் சொல்லித்தான் தீருவேன்" என்றும் சொல்லியவுடன் மக்கள் அனைவரும் கைதட்டியதோடு 'வெட்கம், வெட்கம்' என்று கூப்பாடு போட்டார்கள். இச்சமயத்தில் 4, 5 பேர் எழுந்து போவதாக காட்டிவிட்டு வேறுபக்கம்போய் நின்றனர். "காந்திக்கி ஜே," என்பதைப்பற்றியும், பெரியார் "அதன் அர்த்தத்தில் நான் இப்போழுது ஆட்சேபனை சொல்லவில்லை, ஆனால் அதை ஏன் அன்னிய மொழியில் சொல்லவேண்டும் என்பது தான் எனது ஆட்சேபனை. காந்திவாழ்க, காந்தியார் வெற்றிபெறுக என்ற சொல்ல வார்த்தைகள் தமிழில் இருக்கும்போது, கா-ந்-தி-கி-ஜே என்கின்ற கி-ஜே என்ற உச்சரிப்பு ஏன்? டில்லி சலோ, ஜெய்ஹிந்த் என்கின்ற அன்னிய சொற்கள் எதற்காக? அன்னிய ஆட்சி கூடாது என்கின்ற மக்கட்கு அன்னிய சொல் உச்சரிப்பு எதற்காக? ஆரியன் அல்லது பார்ப்பான் ஆகியவர்கட்கு ஊர் இல்லை, மொழி இல்லை ஆனதால் என்ன வேண்டுமானாலும் அவர்கள் சொல்லலாமே தவிர நாடு, இனம், பிறப்பு, வளர்ப்பு தெரிந்த தமிழ் மக்கள் எதற்காக இப்படிச்சொல்லுவது என்பதை சிந்திக்கவேண்டியதுதான் எனது வேலையின் முக்கிய கடமை" என்றும், உணர்ச்சியுடன் பேசினார்.

இதன் பிறகு ஆங்காங்கு ஒளிந்து இருந்து கூச்சல்போட்டவர்களை பக்கத்திலுள்ளோர் வைதும், மிரட்டியும், சிலருக்கு சிறுஅளவில் கழுத்தைப்பிடித்து தள்ளியும், கலகக்காரர்களை ஓட்டிவிட்டார்கள்.

அதன்பிறகு பெரியார் கடைசியாக பேசுகிறபோது சமீபத்தில் காங்கரஸ் ஆட்சிதான் இந்த நாட்டில் ஏற்படப் போகிறது, அவர்களுக்கு முதலில் தாய்மொழி உணர்ச்சி இருக்கிறதா? இல்லையா? என்பதை தான் பார்க்கப் போவதாகவும். வந்தேமாதரம் "ஜன கண மன" ஆகிய சொற்கள்,பாட்டுக்கள் ஒழிக்கப்பட முயற்சி செய்வதை முதல் வேலையாகக் கொள்ளப்போவதாகவும், தோற்றாலும், வெற்றி பெற்றாலும், லட்சியமில்லாமல் முயற்சிக்கப் போவதாகவும், தமிழ் மக்கள் இந்தமாதிரியாக அன்னிய பாஷை சொற்களை அரசியலிலும், மத இயலிலும் விரட்டியடிக்க முயற்சிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

பிறகு தலைவர் எழுந்து முடிவுரை கூறி மக்களைப் பாராட்டிவிட்டு கூட்டத்தை இனிது முடித்தார்.

"ஆரியம் ஒழிக," "அரசியல் பித்தலாட்டம்ஒழிக," "அன்னியமொழி ஒழிக"என்கின்ற கூச்சலுடன் மக்கள் தெருவில் கூட்டம் கூட்டமாக ஊர்வலம் செல்வதுபோல் ஒலித்துக்கொண்டே சென்றார்கள். இக்கூட்டத்தில் நடந்த காலித்தனத்தின் பயனாய் சில காங்கரஸ் தோழர்கள் பெரியார் தங்கியுள்ள இடத்திற்கு வந்து. தங்களுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்றும், ஏதோ சில காலிப் பிள்ளைகள் சில ஒட்டல்காரப் பார்ப்பனரின் பேச்சைக் கேட்டுக்கொண்டு இரண்டொரு போக்கற்றவர்கள் காப்பிக்கடைக்காரன் வாங்கிக்கொடுத்த கள்ளு சாராயத்தைக் குடித்துவிட்டு, கூப்பாடு போட்டார்கள் என்றும், அதனால் நீங்கள் வருத்தப்படக்கூடாது என்று சொன்னதுடன் இன்று கேட்ட சொற்பொழிவின் பயனால் நாங்கள் எல்லோரும் சீக்கிரத்தில் உங்களிடம் வந்து சேறுவோம் என்று கூறி போனார்கள். அதற்குப் பெரியார், அவர்கள் செய்த காலித்தனத்தின் பயன்தான் இன்று தனக்கு இவ்வளவு தூரம் பேச வாய்ப்பு ஏற்பட்டது என்றும், அதற்காக நன்றி செலுத்துகிறேன் என்றும் பதில் சொன்னார் அவர்களும் சிரித்துக்கொண்டே போனார்கள்.

---

## புகழேந்தி

புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்களின் பேரன் அதாவது தோழர்கள் சரசுவதி—கண்ணப்பன் இவர்களின் மகவுக்கு 'புகழேந்தி" எனப்பெயரிடப்பட்டிருக்கிறது. புலவர் போன்றே புகழுடன் வாழ்க புகழேந்தி!

## தென்னாற்காடு மாவட்ட தோழர்கட்கு

அன்டையீர்,

பெரியார் அவர்கள் பிப்ரவரி முதல் வாரத்தில் நமது மாவட்டத்தில் சுற்றுப் பணயம் வருவதால் அதற்குள் நமது மாவட்டத்தில் (10,000) பத்தாயிரம் அங்கத்தினர்களைச் சேர்த்துதவும்படி வேண்டுகிறேன். ஆ. திராவிடமணி.


நீங்கள் கேள்விப்பட்டீர்களா?
K. R. ராமசாமியின்
கிருஷ்ணன் நாடக சபா
தஞ்சை ராமனாதன் செட்டியார் ஹாலில்: புதிய முறையில்
அநுபவமிக்க நடிகர்களுடன் ஆரம்ப நாடகம்
மனோஹரா
விரைவில் நடைபெறும்:
மானேஜர்: P. V. எத்துராஜ்.

ராஜம் விலாஸ்
கைத்தறி ஜவுளிகள் : : கலர் புடவைகள்
உயர்தர ரகங்கள்! உத்திரவாத ஜரிகை!!
80, 100 நெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்
ராஜம் விலாஸ்,
சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் P. O. திருச்சி.

# இன்னுமா சந்தேகம்

பம்பாய் நகரம்:
ஷெடியூல் வகுப்பு மத்தியசட்டசபை
தேர்தல் முடிவு

அம்பேத்கார் கட்சி நியமி 11334 ஓட்டுகள்
காங்கரஸ் நியமி 2098 ஓட்டுகள்
—பேரல் தொகுதி

அம்பேத்கார் கட்சி நியமி 12900 ஓட்டுகள்
காங்கரஸ் நியமி 2088 ஓட்டுகள்
—வட பம்பாய்

## மத்திய சட்டசபை முஸ்லிம்கள் தொகுதிகள்

எல்லா இடங்களிலும் முஸ்லிம் லீக் நியமிகளே ஜெயித்தனர்.

காங்கரஸ் வெற்றியெல்லாம் இந்துக்கள் தொகுதிகளில்தான். காங்கரஸ் அகில இந்திய ஸ்தாபனமல்ல. முஸ்லிம்களும் ஆதிதிராவிடர்களும் அதிலிருந்து விலகிநிற்பது மறுக்கமுடியாத உண்மை. அதில் நிற்கும் முஸ்லிம்களும், ஆதிதிராவிட சிலரும் சுயநலமிகளாகத்தான் கருதப்படுவார்கள்.

இந்து தொகுதியிலும் காங்கரசை விரட்ட பார்ப்பனீயத்தை அடிப்படையாகக்கொண்ட இந்து மதத்திலிருக்கு மக்களை மீட்க முயற்சியுங்கள்.

எவ்வாறு,

1. ஜாதி மயக்கம்.
2. புராண, சாஸ்திர ராமாயண இதிகாச மயக்கங்கள்.
3. வித்வான்களாலும், மேல்சாதியாராலும், படித்தவர்களென்று சொல்லிக்கொள்பவர்களாலும் உண்டாக்கப்படும் மயக்கம்.

இவைகளிலிருந்து மக்களை மீட்டு உண்மையை கடைப்பிடித்து உலக விஷயங்களை உணர்ந்து கஷ்டங்களையும் இடஞ்சல்களையும் எதிர்நோக்கிநின்று அவைகளை நீக்கும் முயற்சி மேற்கொள்ளும் மனப்பான்மையை மக்களுக்கு ஊட்டுங்கள்.

தி. பொ. வேதாசலம்.

சுயமரியாதை உலகிலே!

## "சூறாவளி"

(மாத வெளியீடு)

கண்கவர் வனப்புடன்— கவிதைகள், கட்டுரைகள் செறிந்தது.

திராவிடத் தோழர்களே! நீங்கள் சந்தாதாரராகச் சேர்ந்துவிட்டீர்களா?

வருட சந்தா ரூ. 1/8 தனிப்பிரதி 0-2-0.

எங்கும் ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு,

சூறாவளி காரியாலயம்,
திருமலைராயன்பட்டினம்.

## திருப்பத்தூரில் பொதுக்கூட்டம்

7-1-46 திங்கள் மாலை 5½-மணிக்கு திருப்பத்தூரில் (இராமநாதபுரம்) திராவிடர்கழகப் பொதுக்கூட்டம் தோழர் முருகைய்யா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் திராவிடநாட்டுப் பிரிவினை, சமுதாயச் சீர்திருத்தம் முதலியவைகளைப் பற்றி வெகு விளக்கமாக சுமார் 3½-மணிக்கு மேலாக பேசினார். பல கேள்விகள் கேட்கப்பட்டன. அவையனைத்திற்கும் தக்கபடி பதில் கூறினார். தலைவர் முடிவுரைகூற கூட்டம் இனிது இரவு9-மணிக்கு முடிந்தது.

7-1-46 திங்கள் மாலை 4மணிக்கு இராமநாதபுரம் ஜில்லா தென்மாப்பட்டு "செந்தமிழ்ப் பொதுநிலைப்பள்ளி"யில் பகுத்தறிவு மன்ற மாணவர் கழகக் கூட்டம், பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 10வயது மாணவன் சிதம்பரம் முன்மொழிய, தெய்வசிகாமணி வழிமொழிய பெரியார் தலைமை வகித்து மாணவர்கள் நன்கு உணரும்படியாக கடவுள், மதம் முதலியவைகளைப்பற்றி விளக்கமாக ½-மணி நேரம்வரை சொற்பொழிவாற்றி, தான் சொன்ன கருத்து மாணவர்களுக்குப் புரிந்ததா என்பதை அறிய அவர்கள் வாய்மொழிமூலம் விரும்பினார். அவ்வண்ணமே சிறுவர்கள் சிதம்பரம், தெய்வசிகாமணி என்ற சீர்திருத்த இளம் மாணவர்கள் பெரியார் சொன்ன கருத்தை அப்படியே பலரும் வியப்புறும் வண்ணம் அழகாக பேசி முடித்து பெரியார் அவர்கட்கு வணக்கம்கூறி சென்றனர். ஆசிரியர் முருகையா அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

## பொங்கல் விழாவில்

வட சென்னை மத்திய திராவிடர் கழக சார்பில் 13-1-46ல் செல்லை வண்ணையம்பதி மாடசாமி நாடார் தெருவில் நெ. 6 மைதானத்தில் தோழர் டி. வி. சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெறும். இரவு 9 மணிக்கு தோழர் வேணுகோபால் பாகவதர் அவர்களால் "விசுவநாதன் அல்லது சீர்திருத்தவாதி" எனும் காலட்சேபம் நடைபெறும்.

o o

வட சென்னை மத்திய திராவிடர் கழக முதலாவது ஆண்டு விழா வண்ணையம்பதி ஜெயராம் நாடார் மனையில் 13-1-46 மாலை 5 மணிக்கு தோழர் எம். ஆர். பாண்டியன் தலைமையில் நடைபெறும். தளபதி சி. என். அண்ணாதுரை மற்றும் பலர் பேசுவார்கள்.

o o

சென்னை திருவல்லிக்கேணி திராவிடர் கழக சார்பில் 301, திருவல்லிக்கேணி ஹைரோட்டில் 14-1-46ல் தோழர் மயிலை சீனி வெங்கடசாமி தலைமையில் தோழர் கே. அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்) மற்றும் பலர் பேசுவார்கள்.

o o

அமைந்தக்கரை திராவிடர் கல்வி வளர்ச்சிக்கழகக் கூட்டம் அம்மன் கோயில் தெருவில் 14-1-46ல் தோழர் தங்கரூபன் தலைமையில் நடைபெறும்.

o o

சென்னை ஜி. டி. அண்ணாமலைப் பிள்ளை தெருவில் ஜூனியர் சொற்போர் குழுவின் சார்பில் 14-1-46மாலை 5-30 மணிக்கு தோழர் மயிலை முத்துக்குமாரசாமி தலைமையில் அன்பழகன் மற்றும் பலர் பேசுவார்கள்.

ஆம், உங்களுக்கு மகத்தான புதுவருட கொண்டாட்டங்கள்
இருந்தன என்பது நமக்குத் தெரியும். ஆனால்
கடல்கடந்த நாடுகளில் சேவை செய்யும்
துருப்புகளின் நிலை என்ன?

★

## மே. த. கவர்னரின்

சைன்ய வசதி, கஷ்ட நிவாரண சகாய நிதிக்கு
தாராளமாகப் பணம் கொடுத்துதவுதன் மூலம் அவர்களுக்கு
உண்மையான மகிழ்ச்சி தரக்கூடிய புத்தாண்டை உண்டாக்குவதற்கு
உங்களால்தான் முடியும்.

★

எனவே

ஹானரரி டிரஷரர், மே. த. கவர்னரின் சௌகரியங்கள்,
கஷ்ட நிவாரண சகாயநிதி, C/o இம்பீரியல் பாங்க், இந்தியா
முதல் லைன் பீச், சென்னை, என்ற விலாசத்துக்கு
தயவு செய்து உங்களது பணத்தை அனுப்பிக் கொடுக்கவும்.

குடி அரசு

1946-ஞு ஜனவரி 12-உ

# ஐந்தாம்படை ஸ்தாபனத்திற்கு அறுபதாம் ஆண்டு

இன்றைய இந்திய தேசிய காங்கரஸ் என்னும் ஐந்தாம்படை ஸ்தாபனத்திற்கு இவ்வாரத்தில் எங்கு பார்த்தாலும் அறுபதாம் ஆண்டு விழா (வைரவிழா) நடைபெறுகின்றது. இது எதைக் காட்டுகிறது என்றால், இந்நாட்டின் அறிவற்ற தன்மையையும், மானமற்ற தன்மையையும்தான் காட்டுகின்றது என்று கோபுரத்தின்மீது இருந்து கூவுவோம்.

ஏனெனில் கடந்த இருமாதத்திற்குமுன் திராவிடர்களில் பலர் கொண்டாடிய தீபாவளிப் பண்டிகைக்கும் இந்த காங்கரஸ் வைரவிழா என்னும் பண்டிகைக்கும் கடுகளவு பேதம்கூட கருத்திலும், கதையிலும், தத்துவத்திலும் இல்லாமலிருப்பதும் அந்த தீபாவளிப் பண்டிகை கொண்டாடிய திராவிட மக்களேதான் பெரிதும் இந்த அறுபதாமாண்டு விழாவையும் கொண்டாடினார்கள் என்பதும் அதை (தீபாவளியைக்) கொண்டாடாத திராவிடர்கள் பெரிதும் இதை (60-ம் ஆண்டை) கொண்டாடவில்லை என்பதையும் கொண்டு விளக்கிக்கொள்ளலாம், விளங்கிக்கொள்ளலாம்.

தீபாவளி உலக சேமத்திற்கு என்று ஆரியர்களால் உற்பத்தி செய்த ஐந்தாம்படைக் கதை. காங்கரஸ் என்பது உலக விடுதலைக்கு என்று (அக்காலத்தில் உலகம் என்பது இந்தியாவைமாத்திரம் பொருத்தாகத்தான் இருந்தது. அதற்கு மேல் உலகம் புராண கற்பிதகாலத்தில் ஆரியருக்குத் தெரிந்திருக்கவில்லை) ஆரியர்களால் ஐந்தாம் படை ஸ்தாபனமாக சிருஷ்டிக்கப்பட்டதாகும். தீபாவளியும் திராவிடர்களை இழிவுபடுத்தி திராவிட ஆதிக்கத்தை அழித்த கதை; காங்கரசும் திராவிடர்களை புராணக் கொள்கைப்படி இழிவு படுத்தி திராவிட ஆதிக்கத்தை அழிக்க ஆரியர்களால் தோற்றுவிக்கத ஸ்தாபனம்.

தீபாவளி போன்ற கதை புராணம் ஆகியவைகளால்தான் திராவிடன் இன்றும் சமுதாயத்தில் சூத்திரன் இழிமகன் 4ம் வருணத்தானாக இருக்கிறான். காங்கரசால்தான் திராவிடன் வெள்ளையனுக்கும் தவிட்டு நிறத்தவனுக்கும் அரசியலில் வாழ்க்கைத் துறையில் அடிமை, தகுதியற்றவன், பின்பற்ற வேண்டியவன், என்கின்ற நிலையில் ஆரியனுக்கும் ஆரியரால் பிடித்துவைத்த மகான்களுக்கும் தேசிய வீரர்களுக்கும் "ஜே" போட்டு, கொடிபிடித்து, படம் வைத்துக் கும்பிடவேண்டியவனாக இருக்கிறான்.

ஆகவே காங்கரஸ், தீபாவளி போன்ற ஐந்தாம்படைஸ்தாபனம், ஆரிய ஆதிக்க ஸ்தாபனம், திராவிடரை அடக்கி இழிவுபடுத்தி சுரண்டி ஆரியர் வாழும் ஸ்தாபனம் என்கிறோம்.

காங்கரஸ் திராவிடனிடமிருந்த அரசியல் ஆதிக்கத்தை ஆரியர் கையில் ஒப்புவித்து ஆரியர்களை தங்கள் ஒற்றர்களாக பயன்படுத்திக்கொள்ளவும், திராவிடர்களுக்கு மனத்துணிவோடு துரோகம், வஞ்சனை, சூழ்ச்சி செய்யவும் வசதிஇருக்கும்படியாக வெள்ளையர் (ஆரியர்)கள் கற்பித்து உண்டாக்கிக் கொடுத்த ஒரு ஸ்தாபனமாகும். அதுவும் அதாவது இந்த காங்கரஸ் ஸ்தாபனம் என்பது வெள்ளையர் (வெள்ளை ஆரியர்) களுக்கும், பார்ப்பனர் (தவிட்டு நிற—கலப்பு ஆரியர்) களுக்கும் 1856ல் ஏற்பட்ட ஒப்பந்தத்தை அதாவது பார்ப்பனர்களுடைய ஆதிக்க ஆயுதங்களான "இந்து மதம், சாஸ்திரம், அவை சம்பந்தமான சமுதாயக் கொள்கைகள், பழக்க, வழக்க, ஜாதி, சமய அமைப்புகள், முறைகள், நடப்புகள் ஆகியவைகளில் நாங்கள் (வெள்ளையர்கள்) பிரவேசிப்பதில்லை" என்று மகாராணி என்ற வெள்ளைமாது அரசி இந்நாட்டு பார்ப்பனருக்கு (இந்திய ஐரோப்பிய ஆரியருக்கு) ஒப்பந்தப் பத்திரம் எழுதிக்கொடுத்து, அந்த ஒப்பந்தப்படி 30 ஆண்டு நடந்துவந்து அதன் பேரில் ஏற்பட்ட பரஸ்பர நம்பிக்கை சிநேக முதிர்ச்சி(யான பி[illegible]ான சிநேகிதம்) ஏற்பட்ட பிறகு அந்த 30 ஆண்டுகளுக்குப் பின் 1886ல் அதே வெள்ளையர் தங்கள் அரசியலுக்கு ஏற்ற அதிகாரத்தை இந்திய ஆரியர்கள் வசம் ஒப்புவிக்க ஒரு தந்திரமாக காங்கரசை கண்டுபிடித்து அதை தாங்களே உற்பத்திசெய்து திட்டம்போட்டு இந்த ஆரியர்கள் கள் கையில் ஒப்புவித்தார்கள்.

இதுதான் காங்கரசின் பிறப்புக்கும், அது பிறக்கவேண்டிய அவசியத்திற்கும் ஏற்பட்ட காரணமாகும்.

அது ஏற்பட்ட பிறகுதான் புரோகிதர்கள் ஹைகோட் ஜட்ஜி (உயர்தர நீதிபதி) களானார்கள். புரோகிதர்களின் மக்கள் நிர்வாக சபை அங்கத்தினர் (மந்திரி)கள் ஆனார்கள்.

வெள்ளையன் இந்நாட்டுக்கு இந்த ஆரியர்களால் அழைத்துவரப்பட்ட காலத்தில் இங்கு அரசராக, நவாபாக, சமஸ்தானாதிபதிகளாக, வேந்தர்களாக இருந்த முஸ்லிம்கள், நாயக்கர்கள், பாண்டியர்கள் என்பவர்கள் முறையே டபேதார், ஜட்காவண்டி, கசாய்க்கடை, பீடி சுற்றுதல் காரர்களாகவும், பில்லை சேவகம், போலீசு, பிராசஸ்சர்வர், பெட்டி ஆபீசர்களாகவும், நாடார்கள் கள்ளுக்கடை கண்டிராக்டர்களாகவும் ஆன நிலைமைக்கு இவர்களே சொந்தக்காரர்களானார்கள். மேற்கண்ட 1856ம் வருட ஒப்பந்தமும் 1885ம் வருடத்து காங்கரசும் ஏற்பட்டிருக்கவில்லையானால் இன்று திராவிட மக்கள் நிலையும் ஆரிய (புரோகித) மக்கள் நிலையும் அடியோடு புரட்சிகரமான நிலையில் இருந்திருக்கும் என்பதை எந்த அறிவு அனுபவம்அற்ற சாதாரண ஜீவனும் மறுக்கமுடியாது என்போம்.

காங்கரசை 1885ம் வருடத்தில் பம்பாயில் ஆரம்பித்த (துவக்கவிழா ஆற்றிய)வர்கள் ஐரோப்பியர் என்பதோடு மாத்திரமல்லாமல் ஐ. சி. எஸ். வர்க்கத்தைச் சேர்ந்த ஏ. ஓ. ஹியூம் ஐ. சி. எஸ். துரையேயாகும். அவரும் அக்காலத்தில் வைசிராயாய் இருந்த டப்ரின் பிரபுவின் யோசனைமீதும் அனுமதி மீதும் ஆரம்பிக்கப்பட்டதாகும். அதை துவக்க அழைப்பு அனுப்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

பியவரும் அந்த ஹியூம் துரையே யாவர்.

அதற்குச் சென்றவர்கள் பெரிதும் பார்ப்பனர்களேயாவார்கள். நம்மாகாணத்தில் இருந்து சென்றவர்களும், திவான்பகதூர் ரகுநாதராவ், வாத்தியார் கே. சுந்தரராமய்யர், ஜி. சுப்பிரமணிய ஐயர், மதுரை வக்கீல் எஸ். மணிஐயர், பி. அனந்தாச்சார்லு, எம். வீரராகவாச்சாரியார் முதலியவர்கள் ஆவார்கள். அதன் கொள்கை இந்த நாட்டில் என்றும் பிரிட்டிஷ் ஆதிக்கம் நிலைத்திருக்கவேண்டும் இந்தியர் ராஜவிஸ்வாசமாக இருக்கவேண்டும். மக்களுக்கு உத்தியோகம் கொடுக்கவேண்டும் என்பனவைகளும் மற்றும் இவை போன்றவைகளுமே அல்லாமல் சுதந்திரமோ சுயராஜ்யமோ பற்றியவை அல்ல என்பது ஞாபகத்திலிருக்கவேண்டும்.

பிறகு காந்தியார் காலத்தில் காங்கரஸ் கொள்கை மாற்றப்பட்டன் என்றால் அவரும் அஹிம்சை சத்தியம் என்கின்ற சக்கரைப் பூச்சுக்களோடும் தீண்டாமை ஒழித்தல், இந்துமுஸ்லிம் ஒற்றுமை என்பனவாகியவைகளோடே அல்லாமல் சுயராஜ்ஜியத்திற்கு ஆகவோ சுயேச்சைக்குஆகவோ பூரண சுயேச்சைக்குஆகவோ அல்லஎன்பதோடு "நாம் சுயராஜ்ஜியத்திற்கு இன்று லாயக்கில்லை என்றும், சுயராஜ்ஜியம் இன்று வந்தாலும் வேண்டாம் என்று சொல்லுவேன் என்றும், சொன்னதோடு பூரண சுயேச்சை என்பது பள்ளிக்கூட பிள்ளைகளின் (பைத்தியக்காரத் தனமான)பேச்சு என்றும்" சொன்னவராவார். மற்றபடி காங்கரஸ் இன்று அரசியலில் பங்கு பெறுவதும், சட்டசபைக்கு நிற்பதும் மற்ற பிற்போக்காளர்களும் தேசத்துரோகிகளுமான, முஸ்லிம் லீக் காரர்களும், ஜஸ்டிஸ்கட்சியார்களும், தாழ்த்தப்பட்ட மக்கள் கட்சியாரும் சட்டசபைக்குப் போய் ஆட்சி நடத்திவிடுவார்கள் என்பதற்கே ஆகும் என்பதுஆக பண்டிதநேரு முதல் பலதேச பக்தர்கள் காந்திசிஷ்யர்களால் சொல்லப்படுவதுமாகும்.

அன்றியும் 1856ம் வருடம் ஒப்பந்தத்திற்கு பிறகும், 1885ம் வருட காங்கரசுக்குப்பின்பும்தான் பிரிட்டிஷ் ஆட்சி கடவுளால் இந்நாட்டுக்கு அனுப்பப்பட்டது என்றும் பிரிட்டிஷ் மன்னர் விஷ்ணு அம்சம் என்றும் நம் ஆரியர் (பார்ப்பனர்)களால் வெளிநாடுகளிலும் சென்று பிரசாரம் செய்யப்பட்டிருப்பதுமாகும்.

ஆகவே இன்றைய காங்கரசு துவக்கப்பட்ட விபரமும், துவக்கிய மக்களும் அதன் கொள்கைகளும் அதன் தலைவர்களும் ஆகிய தன்மைகளையும், இன்றும் அதன் ஜீவனாடியும், லகானும் யார் கையில் இருந்துகொண்டு இருக்கிறது என்பதையும் சிந்தித்து நடுநிலை. பகுத்தறிவோடு பார்த்தால் அது ஐந்தாம்படை ஸ்தாபனமா அல்லவா என்பதும், அது திராவிடர்களை('ராக்ஷதர்களை') அழிக்க, ஒழிக்கவந்த இராமாவதாரமா அல்லவா என்பதும், அதன் சர்வாதிகாரத் தலைவர் விபூஷணாழ்வாரா அல்லவா? அதன் திராவிடப்படை சுக்கிரீவாழ்வார், அனுமாராழ்வார்கள் அல்லவா என்பதையும் பெருங் கருணைகொண்டு சிந்தித்துப் பார்க்க, தலைவணங்கி திராவிட "தேச பக்த" சிகாமணிகளை வேண்டிக்கொள்கிறோம்.

---

## கறுப்புச் சட்டைப் படை அமைப்பு

படையில் சேர, மனு பாரம் வேண்டியவர்கள் "ரிப்ளை" கார்டில் எழுதவும்.

குறிப்பு:- 'ரிப்ளை' கார்டில் ரிப்ளை பாகத்தில் விலாசம் எழுதாமல் வெறும் கார்டாக அனுப்பவும்.

க. ச. ப. அமைப்பாளர்,
குடி அரசு ஆபீசு, ஈரோடு.

---

## அறிவிப்பு

பல எதிர்பாரா காரணங்களால் இவ்வார "குடி அரசு" 8-பக்கங்களுடன் வெளிவருகிறது.

இக்கிழமை பக்கங்கள் குறைந்ததால் செய்திகள் பல வெளிவரவில்லை. திருத்துறைப்பூண்டி திராவிட மாணவர் மாநாடு, கறுப்புச்சட்டைப்படை மாநாடு முதலிய செய்திகள் அடுத்த கிழமை வரும்.

---

## பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

மதுரை ஜில்லா

13-1-46 காலை மதுரை சந்தைப் பேட்டை
14— பெரியகுளம்
15— நிலக்கோட்டை
16— சின்னாளபட்டி
17— வாடிப்பட்டி
18— மதுரை அமெரிக்கன் கல்லூரி
19— சோழவந்தான்
20— காலை, மதுரை "தாலமுத்து நடராசன் வாசகசாலை" திறப்பு விழா
,, மாலை, திண்டுக்கல்
21— முதல் ஜனவரி முடிய திருநெல்வேலி ஜில்லா

மேற்கண்ட சுற்றுப்பிரயாணத்தை நிர்வாகக்கமிட்டி உறுப்பினர்தோழர்சுக்குனி அவர்களுக்காக தோழர் முத்திருளாண்டி தெரிவிக்கிறார்.

கூட்டங்களுக்கு ஒலிபெருக்கி உண்டு.

---

## கறுப்புச் சட்டைத் துணி

கறுப்புச் சட்டை தைப்பதற்கு ஏற்ற துணி, பெரியார் மதுரை, திருநெல்வேலி சுற்றுப்பிரயாண கூட்டங்களில் அடக்க விலைக்கு கிடைக்கும்.

## நெல்லை மாவட்ட தோழர்களுக்கு!

அன்புடைத்தோழர்களே!

வரும் ஜனவரிமாதம் கடைசி வாரத்தில் நமது தலைவர் பெரியார் அவர்களும், மாணவத்தோழர்களும் இயக்க பிரசாரவேலை நிமித்தம் நமது ஜில்லாவிற்கு வருவதால் அது விஷயமாக கூட்ட நடவடிக்கைகளுக்கு ஆங்காங்குள்ள திராவிடர் கழகத்தார் நெல்லை ஜில்லா திராவிட கழகத்திற்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

குறிப்பு:- பொதுக்கூட்டங்களுக்கு தேதி குறிப்பிட வேண்டுகிறோம்.

கே. எம். பிரமநாயகம்.
தலைவர், ஜில்லா திராவிடர் கழகம்,
"குமார விலாஸ்"
திருநெல்வேலி டவுன்.

## "பெரியார் வேலைத்திட்டம்"

அச்சுவேரி வாலிபர் சங்க 5-வது ஆண்டுவிழா 20-12-45ல் தோழர் தாமோதரம் தலைமையில் நடைபெற்றது. தோழர் கனகசபாபதி திராவிடர் கழகம், பெரியாரவர்களின் வேலைத்திட்டம், காங்கரஸ் கபடநாடகம், பார்ப்பனசூழ்ச்சி முதலியனபற்றி விரிவுரையாற்றினார்.

## தோழர்கட்கு

1946-ம் ஆண்டிற்கு குறைந்தது ஒரு லட்சம் அங்கத்தினர்களைத் திராவிடர் கழகத்திற்குச் சேர்க்க முடிவு செய்துள்ளதால் அங்காங்குள்ள திராவிடர் கழக நிர்வாகஸ்தர்களும், பிற முக்கிய தோழர்களும் தேவையான இரசீது புத்தகங்களை குடி அரசு ஆபீசிலிருந்து வரவழைத்து அங்கத்தினர்களைச் சேர்த்தனுப்பக்கோருகிறேன். கீழ்க்கண்ட முறைகளைக் கவனிக்கவேண்டுகிறேன்.

1. பெண்களையும் அதிகமாகச்சேர்க்கவேண்டும்.

2. சென்ற ஆண்டு அங்கத்தினர்களாயிருந்தவர்களிடமும் நாலணா வீதம் இவ்வாண்டிற்கு இரசீது கொடுத்து வசூலிக்கவேண்டும்.

3. தலைமை நிலையத்திற்கு அனுப்பவேண்டிய இரசீது பகுதியோடு சென்ற ஆண்டு அங்கத்தினர்களாக இருந்து இவ்வாண்டு கட்டணம் செலுத்தியவர்களின் பெயர்களையும், இவ்வாண்டில் புதிதாகச் சேர்ந்தவர்களின் பெயர்களையும் தனித்தனி தாளில் எழுதி அனுப்பவேண்டும்.

4. ஒவ்வொரு அங்கத்தினரிடமிருந்தும் வசூலிக்கப்படும் நாலணாவில் இரண்டணாவை தலைமை நிலையம் (ஈரோட்டிற்கு) அனுப்பவேண்டும்.

5. ஜில்லா தலைமைக் கழகம் அமைக்கப்பட்டு முறையாக இருந்தால் ஜில்லா கழகத்திற்கு அனுப்பவேண்டிய இரசீது பகுதியை அவ்விடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மேலேகண்டபடி லட்சம் அங்கத்தினர்களைச் சேர்த்தாகவேண்டுமாதலால் தோழர்கள் யாவரும் அயராது முயல வேண்டுகிறேன்.

அங்கத்தினர்களைச் சேர்க்கும் அலுவலில் ஆங்காங்குள்ள கறுப்புச் சட்டைப்படையினரும் ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

ஆ. திராவிடமணி.

## கரூர் தாலூகா 4வது திராவிடர் கழக மாநாடு

3-2-46ந் தேதி ஞாயிற்றுக்கிழமை ந. புகளூர் தவுட்டுப்பாளையம் நாகம்மையார் பந்தலில் ஷை மாநாடு நடைபெறும்.

ஷை மாநாட்டில் கறுப்புச்சட்டைப் படை அணி வகுப்பில் தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ. அவர்கள் வீர உரையாற்ற ஒப்புக்கொண்டுள்ளார்.

பெரியார் ஈ. வெ. ராமசாமி, தோழர் டி. பி. வேதாசலம் முதலானவர்களை அழைக்கப்பட்டிருக்கிறது.

## மு. கருணாநிதி

தோழர் மு. கருணாநிதிக்கு அம்மை நோய் கண்டிருப்பதால் திருவாரூரில் படுக்கையில் இருக்கிறார்.

## மதுரையைப் பின்பற்றுக!

தோழர்கள் என். எஸ். கிருஷ்ணன்—எம்.கே. தியாகராஜபாகவதர் இவர்களை கருணைகாட்டி விடுதலைசெய்ய வேண்டுமென்று சென்னைக் கவர்னரைக் கேட்டுக்கொள்வதாய் 9-1-46ல் நடந்த மதுரை முனிசிபல் கவுன்சில் கூட்டத்தில் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது.

## இடைப்பாடியில் பெரியார்

29-12-45ந் தேதி காலை 8-30 மணிக்கு இடைப்பாடிக்கு பெரியார் அவர்கள் வந்து சேர்ந்தார். கூட்ட வரவேற்புக் கமிட்டியாளர்கள் பூமாலை போட்டு வரவேற்றார்கள். பிறகு 10 மணிக்கு குதிரை பூட்டிய வண்டியில் ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தில் இயக்கத் தோழர்கள் பலர் கறுப்புச்சட்டை அணிந்திருந்தனர். 'பெரியார் வாழ்க' 'திராவிடநாடு திராவிடருக்கே', என்பனபோன்ற சப்தங்கள் எழுந்தன. பலர் மாடிகளின் மீதிருந்து பூமாரி சொரிந்தனர். சிலர் பெரியார் அவர்களுக்கு மாலைகள் இட்டனர். பல முஸ்லிம் தோழர்களும் ஊர்வலத்தில் முக்கிய பங்கு எடுத்துக் கொண்டனர்.

பிறகு 11 மணிக்கு சினிமாக் கொட்டகையில் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தோழர் இரா. தாண்டவன் வரவேற்புரை நிகழ்த்திய பின் சலகண்டபுரம் தோழர் ப. கண்ணன் அவர்களைத் தலைமை வகிக்கும்படியும் பெரியார் அவர்கள் கழகத்தைத் திறந்து வைக்கும்படியும் கேட்டுக்கொண்டார். தோழர் ப. இராமலிங்கம் அதை ஆமோதித்தார். பிறகு தோழர் வி. எஸ். மணி அவர்களும், தோழர் மணியம்மையாரும் பேசினார்கள். பெரியார் அவர்கள் இடைப்பாடி திராவிடர் கழகத்தைத் திறந்து வைத்து 2 மணி நேரம் சொற்பொழிவாற்றினார். பெரியாருக்கு கறுப்பு மாலை சூட்டப்பட்டது. பிறகு மாலை 1 மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

ஷை கூட்டத்தில் பாகவதர், கிருஷ்ணன் ஆகியவர்களை விடுதலை செய்யும்படி சர்க்காரை இக்கூட்டம் கேட்டுக்கொண்டது என்ற தீர்மானம் நிறைவேறியது.

## பிறப்பு

இத்திங்கள் ஒன்பதாம் நாள் கே. சோழங்கநல்லூர் சின்னத்தங்கம் குழுமாயி அம்மாளுக்கு ஒரு ஆண்மகவு பிறந்துள்ளது. குழந்தைக்கு "திராவிடமணி" என்று பெயர் சூட்டியதன் நினைவாக குடி அரசிற்கு ஒரு ரூபாய் நன்கொடையனுப்பியுள்ளார்கள்.

மாணவர் பகுதி

## திராவிட மாணவர்

திருத்துறைப்பூண்டியில் 6-1-46ல் தோழர் தவமணி இராசன் தலைமையில் நடந்த முதலாவது திராவிட மாணவர் மாகாண மாநாட்டு வரவேற்புக்குழு கூட்டத்தில் ஷை மாநாட்டை நீடாமங்கலத்தில் அடுத்த திங்கள் முதல் வாரத்தில் நடத்துவதென்று முடிவுசெய்யப்பட்டது.

மாநாட்டிற்கு குறைந்தது ரூ. 3000 வசூலிக்க வேண்டுமென்றும் அதற்குத் தோழர்கள் இளம்வழுதி அண்ணாமலை நகரிலும், இரா. சொக்கப்பா குடந்தையிலும், ஆர். சரவணன் பி. ஏ., நீடாமங்கலம் வட்டத்திலும், ஆ. திராவிடமணி பி. ஏ., கூடலூர் வட்டத்திலும், ஆர். திருநாவுக்கரசு சேலத்திலும், ஏ. பி. சனார்த்தனம் வடஆற்காடு, சென்னையிலும், வி. பி. சாமிநாதன், கே. சண்முகம் ஆகியோர் திருச்சி மாணவரிடத்தும், பி. குழந்தையும் திராவிடக் கழகத்தாரும் பட்டுக்கோட்டையிலும், எம். சௌந்திரபாண்டியன் தஞ்சையிலும், இராமானுஜம் மதுரையிலும், எஸ். தவமணி இராசன் இயக்கப் பிரமுகர்களிடத்துமாகி வசூல் செய்வதென்று முடிவு செய்யப்பட்டது.

மாநாட்டு ஆபிஸ் ஈரோட்டில் இருப்பதென்றும், தோழர் எஸ். தவமணிஇராசன் தலைவர்களை அழைக்க கடிதப் போக்குவரத்து நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தோழர் சரவணன் பி. ஏ., அவர்களை மாநாட்டுக் கூட்டுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டது.

o o

திராவிட மாணவர் மாகாண மாநாட்டு நிதிக்கு உதவிசெய்ய விரும்பும் தோழர்கள் கீழ்காணும் முகவரிக்கு தங்கள் நன்கொடைய காலந்தாழ்த்தாது அனுப்பி உதவ மாநாட்டுச் செயலாளர்கள் ஆர். சரவணன் பி. ஏ., அவர்களும், ஆர். இளம்வழுதியவர்களும் கேட்டுக்கொள்கிறார்கள்:

வரவேற்புக்கழகத் தலைவர்,
திராவிடமாணவர் முதலாவது
மாகாண மாநாடு ஆபீஸ்,
42, கச்சேரிவீதி, ஈரோடு.

o o

சேலம் திராவிட மாணவர் கழக சார்பில் தோழர் பி. எஸ். கோவிந்தன் இன்னிசைக் கச்சேரி 15-1-46ல் புரட்சிக்கவி பாரதிதாசன் தலைமையில் நடைபெறும்.

## வரப்பெற்றோம்

நாகை என். எஸ். ஜீவிபெயின்டிங் ஒர்க்சார் அனுப்பிய "திராவிடநாடு திராவிடருக்கே" என்று பொறிக்கப்பட்ட அழகிய சிறு தகடு வரப்பெற்றோம். வீட்டுத் தலைவாயிலை அலங்கரிப்பதற்கு அருமையானது.

## கருணை காட்டுக!

(கீழ்கண்ட இடங்களில் நடைபெற்ற கிருஷ்ணன்—பாகவதர் விடுதலை முயற்சிக் கூட்டங்களில் தமிழ்மணிகள், நகைச் சுவை அரசு N. S. கிருஷ்ணன், இசை உலக ஒளி M. K. தியாகராஜ பாகவதர் இருவரையும் கருணை காட்டிவிடுதலை செய்யமாறு அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்வதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.)

o o

பெரிய காஞ்சீபுரம் திராவிடர் கழக சார்பில் 28-12-45ல் தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில் நடந்த பொதுக்கூட்டம்.

o o

கனியூர் திராவிடர் கழக சார்பில் 24-124-5ல் தோழர் எ. எஸ். துரைசாமி தலைமையில் நடந்த பொதுக்கூட்டம்.

* *

பிச்சாண்டார் கோயில் 25-12-45 திராவிடர் கழக பொதுக்கூட்டம்.

குறிஞ்சிப்பாடி 30-12-45ல் தோழர் இளம்வழுதி தலைமையில் நடந்த பொதுக்கூட்டம்.

* *

தூத்துக்குடி சௌந்தரப்பாண்டியன் சமதர்ம சங்க 1-1-46ல் தோழர் எ. செல்வத்துரை ஆசிர் தலைமையில் அங்கத்தினர் கூட்டம்.

* *

நாகையில் 3-1-46ல் தோழர் எ. எம். பி. திருவம்பலம் செட்டியார் தலைமையில் நடந்த, நாகை நகர காங்கரஸ் கமிட்டி, ரபீகுல் இஸ்லாம் சங்கம், கம்யூனிஸ்ட் கட்சி. சுருட்டுத் தொழிலாளர் சங்கம், விசுவகர்ம தொழிலாளர் சங்கம், வரிகொடுப்போர் சங்கம், ஜின்னா வாலிபர் சங்கம், கொல்லத்துக்காரர் சங்கம், வண்டிக்காரர்கள் சங்கம். தேசிய தேவர் வாலிபர் சங்கம், மருத்துவர் சங்கம், யாதவர் சங்கம், நூல் நூற்போர் சங்கம், ஒய். எம். சி. எ., நகரம் சுத்தம் செய்வோர் சங்கம், ரோலிங் மில் தொழிலாளர் சங்கம், மணி பகுத்தறிவுக் கழகம், பைந்தமிழ் இளைஞர் கழகம், சோஷியல் உடற்பயிற்சிக்கழகம், கமாலியா முஸ்லிம் லீக், அன்ஜுமனே அஹ்பாபுல் வத்தன், அன்ஜுமனே அஹ்பாபுல் இஸ்லாம், தன்மதிப்புக் கழகம், திராவிடர் கழகம் ஆகிய 24 சங்கங்களின் சார்பில் நடந்த பொதுக்கூட்டம்.

* *

ஆலத்தூர் தாலுகா திம்மனாயக்கன் பட்டி 24-12-45ல் தோழர் ஒய். எஸ். அருணாசலம் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டம்.

* *

சேலம் தாலுகா தளவாய்ப்பட்டி 8-12-45ல் தோழர் டி. பி. மாரய்ய நாயுடு

## சென்னை மாவட்ட திராவிடர் பெடரேஷன் (ஜஸ்டிஸ் கட்சி)

### புதிய நிர்வாகிகள் தேர்தல்

சென்னை மாவட்ட திராவிடர் பெடரேஷன் (ஜஸ்டிஸ் கட்சி), சென்னை சுயமரியாதைச் சங்கம் ஆகியவைகளின் புதிய நிர்வாகக்கமிட்டிகள் தேர்தல் கூட்டம் 6-1-46மாலை 5-மணிக்கு பொம்மு செட்டித் தெரு 11-வது மாடியில் நடைபெற்றது. எல்லா வட்டங்களிலிருந்தும், 70-பேர்களுக்குமேல் வந்திருந்தனர்.

சென்னை திராவிடர் பெடரேஷனுக்கு ஒவ்வொரு வட்டத்திற்கும் இரண்டு பிரதிநிதிகள் வீதம் நிர்வாகக் கமிட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்: தோழர் சி. டி. டி. அரசு. துணைத்தலைவர்கள், என். ஜீவரத்தினம், எ. எஸ். பெருமாள் பி.எ., பொதுக் காரியதரிசி: என். வி. நடராசன், சர்க்கில் அமைப்பாளர்கள்: என். எம். சுப்ரமண்யம், கே. கோவிந்தசாமி, என். எஸ். தங்கரூபன், ஜே. திராவிட அரசு, கறுப்புச்சட்டைப்படை காப்டன் சி. கணேசம், துணை காப்டன்கள்: எஸ். ஆர். சாண்டோ, வி. சுருளியமா.

தோழர் டி. எ. எஸ். சாமியின் ராஜிநாமா கமிட்டியில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

பின்னர் சென்னை சுயமரியாதைச் சங்கத்திற்கும் நிர்வாகக் கமிட்டித் தேர்தல் நடைபெற்றது. ஒவ்வொரு டிவிஷனுக்கும் இரண்டு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் வித்வான் தோழர் பு. செல்வராஜ், துணைத்தலைவர்கள்: தா. பெரியசாமி, எ. எ. கபாலமூர்த்தி, பொதுக்காரியதரிசி: எம். எஸ். முத்து. கூட்டுக்காரியதரிசிகள்: எம். கிருஷ்ணன், கே. வி. குப்புசாமி, பொருள் காப்பாளர்: என். வி. நடராசன்.

## திருவரம்பூரில் "பகுத்தறிவுக் கண்காட்சி"

20-1-46 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை திருவரம்பூர் சந்தை கூடும் இடத்தில் ஓர் "பகுத்தறிவுக் கண்காட்சி" காண்பிக்கப்படும். கட்டணம் கிடையாது.

---

தலைமையில் நடந்த பொதுக்கூட்டம்.

o o

திருக்காட்டுப்பள்ளி கிருஷ்ணன்—பாகவதர் விடுதலை முயற்சிக் கமிட்டிக் கூட்டம் 7-1-46ல் தோழர் ஓ. ஜி. ராமச்சந்திர அய்யர் தலைமையில்.

o o

திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி, நாகை முதலியவூர் மக்கள் நூற்றுக் கணக்காக கையொப்பம் வாங்கி மனு அனுப்பியுள்ளார்கள்.

## இயக்கச் செய்திகள்

அம்பிகாபுரம் அண்ணாதுரை பகுத்தறிவுக் கழக சார்பில் 10-11-45ல் தோழர் மு. பிரமநாயகம் தலைமையில் கழக மூன்றாவது ஆண்டுவிழாவும் பெரியார் பிறந்தநாள் விழாவும் நடைபெற்றது தோழர்கள் ப. ரஞ்சிதம்மாள், ஆர். செல்வராஜ், அருணாசலம், எஸ். சண்முகவேல், மனுவேல், செல்லையா, துரைசாமி ஆகியோர் பேசினர்.

o o

நீடாமங்கலம் 23-11-45ல் சுயமரியாதை சங்க உறுப்பினர் கூட்டம் சங்க கட்டிடத்தில் தோழர் சரவணன் பி. எ., தலைமையில் நடைபெற்று தோழர்கள் அ. ஆறுமுகம், எஸ். ரெத்தினசபாபதி, சரவணன், ஆர். விசுவநாதன் ஆகியோர் முறையே தலைவர், துணைத்தலைவர், காரியதரிசி, துணைக்காரியதரிசிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o

வடசென்னை திராவிட நடிகர் கழக நிர்வாகக் கூட்டம் 5-12-45ல் தோழர் எஸ். ஆர். சாண்டோ தலைமையில் நடைபெற்று தோழர்கள் டி. வி. சுந்தரமூர்த்தி, எம். எஸ். மணி, கே. எ. மலை, எம். ஆர். பாண்டியன் ஆகியோர் தலைவர், செயலாளர்கள், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o

தாப்பாய் கிராமம் 11-12-45ல் தோழர் எ. நடராசன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் பி. சி. ராமலிங்கம், டி. எ. வீரமுத்து ஆகியோர் திராவிடர் நிலையைப்பற்றிப் பேசினர்.

o o

சாத்தூர் தாலுகா சிவஞானந்தாபுரம் திராவிடப் பெற்றோர் சங்க விழா 10-12-45ல் நடைபெற்றது.

o o

சென்னை பவழக்காரத்தெரு திராவிட இளம் பேச்சாளர் கழக சார்பில் தோழர் மு. பழனிச்சாமி தலைமையில் 9-12-45 தேதி நடந்த கூட்டத்தில் தோழர்கள் சேதுராசா, ராமு ஆகியோர் பேசினர்.

o o

திருச்சி திராவிட மருத்துவ நடிகர் கழகத்தின் "கமலா அல்லது கைம்பெண் கண்ணீர்" என்னும் நாடகம் 15-12-45 தேதி சிறப்பாக நடைபெற்றது. பபூன் எம். எஸ். சண்முகம் முதலியோர் நடித்தனர்.

o o

பரங்கிமலை ஆதம்பாக்கம் பகுத்தறிவு இளைஞர் கழக சார்பில் 29-12-45 தேதி எஸ். வி. இரகுவேல் தலைமையில் கழக வருடாந்திர தேர்தல் கூட்டம் நடைபெற்று தோழர்கள் பி. கிருட்டினசாமி, வி. எஸ். ராசவேல், எம். துரை, எம். தணிகாசலம் ஆகியோர் முறையே தலைவர், துணைத் தலைவர்,

காரியதரிசி, துணைக்காரியதரிசிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பலர் பேசினார்கள்.

o o

சென்னை மாடசாமி நாடார் தெரு மைதானத்தில் 23-11-45ல் சௌந்திர பாண்டியன் வாலிபர் சங்க பொதுக்கூட்டம் தோழர் சி. முருகையா தலைமையில் நடைபெற்று தோழர்கள் எஸ். ஆர். சாண்டோ, பி. எஸ். கே. பழனிசாமி, என். வி. நடராசன், கே. சாந்தலிங்கம், டி. திருநாவுக்கரசு பாண்டியன் ஆகியோர் பேசினர்.

o o

நாகை தன் மதிப்புக் கழக நிர்வாகக் கூட்டம் 11-12-45 மாலை தலைவர் டி. கே. விசயராகவலு தலைமையில் நடைபெற்றது. தோழர் எஸ். பி. கன்னையன் (காரியதரிசி) விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. செயலாளராக தோழர் பி. கே. பக்கிரிசாமியும், துணைச் செயலாளராக எஸ். அருணாசலமும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o

சென்னை வண்ணாரப்பேட்டையில் 9-12-45ல் சௌந்திரபாண்டியன் வாலிபர் சங்க ஆதரவில் தோழர் டி. பெரியசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் எம். நமசிவாயம், என். எம். சுப்ரமணியம், கே. எஸ். பாண்டியன், எம்.பி.பொன்னுசாமி, எஸ். சிவராமன், எம். ஆர். பாண்டியன், எம். பாலசுந்தரம் ஆகியோர் பேசினர்.

o o

திருவண்ணாமலையில் திராவிடர் சொற்பயிற்சிக்கழகம் ஒன்று தோழர் எம். கோவிந்தசாமி தலைமையில் நிறுவி 5-1-46 முதல் நடந்து வருகிறது. சுமார் 50-பேர் பயிற்சி பிரதி சனிக்கிழமையிலும் இரவு 9-மணிக்கு பயிற்சி பெறுகின்றனர். பயிற்சி முடிவுற்றதும் இவ்வாண்டு பிரசாரக் கழகமாக வேலை செய்யும்.

o o

தூத்துக்குடி ஊ. பு. அ. சௌந்திர பாண்டியன் தமிழர் சமதர்ம சங்க அங்கத்தினர் கூட்டம் 1-1-46ல் தோழர் எ. செல்வத்துரை ஆசிர் தலைமையில் இம்மாத இறுதியில் ஆண்டுவிழா நடத்த முடிவுசெய்ததுடன் திருச்சி தீர்மானப்படி பட்டம் பதவி துறந்தவர்களைப் போற்றித் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

## விளம்பரம்

ஈரோடு தாலூகா, லக்காபுரம் புதுவலசில் இருக்கும் அலாவுதீன் சாயபு தெரிவித்துக்கொள்வது. என் மனைவி அமீன் பீவி, எனக்கு பாத்தியப்பட்ட வில்லிவீட்டை பாராதீனம் செய்தால் அது செல்லாது.

10-1-1946 அலாவுதீன் சாயபு.


## "ஒரே மனதாக உழைப்பீர்"

"வெற்றி பெருக! நற்றமிழ்ப் பொங்கல்
வாழ்த்து உரைக்கின்றோம்: திராவிடத் தோழர்காள்!
பொங்கல் மகிழ்ச்சி எங்கும் தங்குக!
திராவிடநாடு திராவிடர்க்காக்க
ஒரே மனதாகப் பெரிது உழைத்திடுவீர்!
வணக்கம் நன்றி! வாழியர் நலமே!"

அன்புள்ள,

**மா. நா. இராசமாணிக்கம்**

ஸ்ரீ இலக்ஷ்மி நூல் பதிப்பகம், திருவத்திபுரம், வ. ஆ.

அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்

## தலைவர்—தளபதி

காலண்டர்கள் விரைவில் வெளியிட எல்லா ஏற்பாடுகளும் நடந்து வருகிறது.

திராவிடநாடு அமைந்த படத்தில் பெரியார் உருவமும் பதியவைத்து கண்ணைக்கவரும் முறையில் வெளிவருகிறது.

எங்கள் பெயருக்கு, 25-காலண்டர்கள், 50-காலண்டர்கள் அனுப்பி வையுங்கள் என்று பல ஊர் தோழர்கள் கேட்டுவருகிறார்கள்.


இன்னும் சில தினங்களில் வெளிவந்துவிடும். அதுவரை பொறுத்துக் கொள்ளுமாறு நமது தோழர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

விபரங்கட்கு:-

திராவிடன் பதிப்பகம், தயாற்பேட்டை 18, வேலூர் வ. ஆ.

பொங்கலோ பொங்கல்!

பொங்கும் மங்களம் திராவிடம் எங்கும் தங்குக!



சாதி, மதம் முதலிய பேதமின்றி பலகோடி மக்களையும், சமத்துவமாக தன்னுடைய பிரகாச ஒளியினால் புத்துயிர் அளித்துக் காப்பாற்றிக் கொண்டுவரும் சூரியன் பூசையாகிய பொங்கல் பண்டிகையை அவரவர் இல்லத்தில் உடல் நலத்தோடும், மனமகிழ்ச்சியோடும், மனைவி மக்களுடன் புது ஆடை உடுத்தி குதூகலமாய், மங்களகரத்துடன் கொண்டாட மனமார வாழ்த்துகிறோம்.

மானேஜர்,

ஜெயராம் வைத்தியசாலை,

23, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்.

ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கவேண்டிய அற்புத சஞ்சீவி

ஜெயராம் காயசுத்தி லேகியம்

எமது சோல்ஏஜண்டு:

M. E. அப்துல் ரகிமான் சாகிபு,

புகையிலை வியாபாரம், பெரியகடைவீதி, திருவண்ணாமலை.


Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press
42, Gurchery street ERODE.